காலத்திலே எந்தெந்த மாவட்டம் பிரிக்கப்படும் என்பதும் அதற்கு என்ன பெயர் என்பதையும், எந்தெந்த மாவட்டங்களில் எந்த வட்டங்கள், எந்த ஏரியாக்கள் என்பதைக் கூட அவர் காலத்தில் நியமனம் செய்துவிட்டு போய் விட்டார்கள். அட்டவணை போட்டார்கள். அந்த அட்டவணையைத் தான் பின்னால் வந்தவர்கள் நடத்தினார்களேயொழிய—அந்த அட்டவணையிலும் சில குறைபாடுகளை ஏற்படுத்தினார்கள் என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். நான் முதலிலே தெரிவித்தபடி மிக விரைவில்—இப்பொழுது 3, 4 இடங்களை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்த்து தேர்ந்து எடுத்து இருக்கிறார்கள். வருவாய்த் துறையிலே சிறப்பு ஆணையாளர் அதைப் பார்த்து அந்த 3, 4 இடங்களில் எது மக்களுக்கு மிக சௌகரியமாக இருக்கும் என்பதை எண்ணி எதிர்காலத்தில் அந்த மாவட்டத்தில் அங்கே பல கட்டடங்களைக் கட்டுவதற்கு வேண்டிய ஏதுவான இடத்தில் விரைவில் கட்டடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 593. திரு. ஓ. எஸ். அமர்நாத். மாண்புமிகு கல்வி அமைச்சர். 593—

மதுரையில் கூடுதல் அரசு மகளிர் கல்லூரிகள்.

*2426 **திரு. ஓ. எஸ். அமர்நாத் :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா :

மதுரை நகரிலும் பக்கத்து கிராமங்களிலும் படிக்கும் பெண்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே போவதால் மதுரையில் மேலும் இரண்டு கூடுதல் அரசு மகளிர் கல்லூரிகள் அமைக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரிலே மதுரை மீனாட்சி அரசு கலைக்கல்லூரி என்று ஒரே ஒரு கல்லூரி இருக்கிறது. மதுரை நகரைச் சுற்றி மொத்தமாக மக்கள் தொகை 13 இலட்சம் உள்ளது. மதுரை மாவட்டத்தைச் சுற்றி மக்கள் தொகை மொத்தம் 25 இலட்சம் வரை

உள்ளது. ஆனால் அரசு கலைக் கல்லூரி, பெண்கள் கல்லூரி ஒன்று தான் இருக்கிறது. கிராமப்புறத்திலிருந்து வருகின்ற பெண்கள் படிப்பதற்கு ஏதுவாக அந்தக் கல்லூரியில் இடம் கிடைக்காமல் அவர்களுடைய படிப்பு வீணாக பாழாகிறது. எனவே இதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் மதுரை நகருக்கு கூடுதல் கலைக் கல்லூரி அமைக்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போதிய நிதி ஆதாரம் இல்லாத காரணத்தினாலும் கலைக் கல்லூரியில் படிப்பதன் காரணமாக வேலை வாய்ப்பு கிடைக்கக்கூடிய நிலை இல்லாத காரணத்தினாலும் தற்போதைக்கு கலைக் கல்லூரி ஆரம்பிக்கின்ற உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. ஓ. எஸ். அமர்நாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது பிளஸ் 2 தேர்வு முடிந்து, கல்லூரியில் அட்மிஷன் சீசன் ஆரம்பமாகின்றது. எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் ஒரு தொல்லையாகவே இருக்கிறது. எங்களுக்கு கல்லூரியில் இடம் வாங்கித் தாருங்கள், பி.எஸ்.சி, கெமிஸ்ட்ரி, பி.எஸ்சி. ஃபிசிக்ஸ் போன்ற மிகவும் தேவையான பாடங்கள் மிகவும் அதிகமாக டிமாண்ட் உள்ள கோர்சுகளில் படிப்பதற்கு மாணவிகள் முன்வருகிறார்கள். அதனால் எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மிகவும் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறோம். எனவே. இதைக் கருத்தில் கொண்டு மதுரை நகரில் இல்லை என்றாலும் மதுரைக்குப் பக்கத்தில் உள்ள திருப்பரங்குன்றம்—மதுரை நகரிலிருந்து 10 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்றது. அங்கே, திருப்பரங்குன்றம்—தேவஸ்தான கோவில் சார்பாக ஒரு கல்லூரி அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்திலே ஒரு செய்தியை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன் அரசு கல்லூரிகளில் மார்க் அடிப்படையிலேதான் மாணவர்கள், மாணவிகள், தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினரோ மற்றவர்களோ சொல்லி ஒரு நபருக்கு அனுமதி வாங்கித் தரக்கூடிய நிலைமை அதிலே சுத்தமாக கிடையாது. அப்படி யாராவது கல்லூரித் தலைவர்கள் செய்தால், அவர்கள் மீது நடவடிக்கையும் எடுக்கப்படும் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. ஆகவே,

சிபாரிசுக்காகவோ இடம் வாங்கித் தருவதற்காகவோ சட்ட மன்ற உறுப்பினர்களோ வேறு யாரோ அரசால் நடத்தப் படுகிற கலைக் கல்லூரி, என்ஜினியரிங் கல்லூரி, பாலி டெக்னிக் போன்ற எந்த ஸ்தாபனத்துக்கும் அவர்கள் போக வேண்டிய அவசியம் இல்லை என்றே நான் கருதுகிறேன். ஆகவே, மார்க் அடிப்படையிலே முழுவதும் போடப்பட்டு வருகிறது. மதுரைக்குப் பக்கத்திலே இருக்கிற மகளி ருக்காக யாராவது தனிப்பட்ட முறையிலே கல்லூரி ஆரம்பிக்க முன்வந்தால் அப்போது ஏதாவது சாத்தியக் கூறுகள் இருக்குமா என்று வேண்டுமானால் பரிசீலிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது இந்த மாதிரிகல்லூரி யிலே பெண்களை அதிகமாகச் சேர்ப்பதற்கு புதிதாக நாம் கல்லூரி ஆரம்பிக்க முடியாது என்று சொன்னார் கள். இப்போது பெண்கள் பிளஸ் 2 படித்துவிட்டு அவர் கள் வீட்டில் இருந்தால் மணமகன் வந்து பெண் கேட்கும் போது கூட கிராஜுவேசன் படித்து இருக்கிறார்களா, பி.ஏ., எம்.ஏ., படித்து இருக்கிறார்களா, சட்டப்படிப்பு படித்து இருக்கிறார்களா என்று கேட்கிறார்கள் அது மாத்திரமல்லாமல் பணம் கொடுப்பதோடு, நகைபோடுவ தோடு இந்தத் தொல்லை வேறு வந்துகொண்டு இருக்கிறது. ஆகையினால், பெண்களுக்கு ஏற்கெனவே An assurance was given by our beloved Chief Minister in the Assembly. கடந்த முறை சொன்னார்கள், நான் பேசும்போது கூட, பெண் களுக்கு என்று தனியாக ஒரு கல்லூரி நடப்பு ஆண்டிலே நிலக்கோட்டையிலே ஆரம்பிக்கப்படும் என்று கூட சொல்லி இருக்கிறார்கள். அது குறிப்பிலே இருக்கிறது. (குறுக் கீடு) தயவுசெய்து நான் கேள்வி முழுவதையும் சொன்ன பிறகு அமைச்சர் அவர்கள் சொல்லுங்கள்.

முற்பகல் 9-50

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் எது சொன்னாலும் அது நடக்கும். அதற்கு உட்பட்டுத் தான் எங்களுடைய பேச்சு, எங்களுடைய பதில்கள் அமையும். (மேசையைத் தட்டும் ஒலி.) ஆகவே, சட்டசபையிலே அதைச் சுட்டிக்காட்டி பேசுவது என்பது முறையல்ல.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் என்ன விரும்புகிறாரோ என்ன சொல்கிறாரோ அதன்படி எல்லாத் துறைகளும் உத்தரவிடும், நடக்கும். (மேசையைத் தட்டும் ஒலி.) எனவே, அதுபற்றிச் சொல்ல வேண்டாம். இன்னொன்றை யும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். கல்யாணத் திற்காகப் படிப்பல்ல. மணமகன் கிடைக்கவில்லை என்பதற் காகப் படிப்பல்ல. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர் களுடைய அரசு விரும்புவது ஒவ்வொரு பெண்ணும் சுதந்திரமாக தன் சொந்தக் காலில் நிற்கக்கூடிய தகுதியைத் தரவேண்டும் என்பதற்காகத்தான் கல்வியே தவிர (மேசையைத் தட்டும் ஒலி) யாரோ ஒருவருக்கு வாழ்க்கைப் பட வேண்டும் என்பதற்கு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 594, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

594—

இடநெருக்கடியைத் தவிர்க்க பெண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு பல்லடுக்குக் கட்டிடம்.

*4823 டாக்டர் பெ. **வீரபாண்டியன்** :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கம் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் இட நெருக்கடி இருப்பதால் பல்லடுக்குக் கட்டிடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவங்கும்?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் பெ. **வீரபாண்டியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் பெண்கள் மேல்நிலைப் பள்ளி மிகவும் சிறிய கட்டிடத்தில் அமைந்துள்ளது, இட நெருக்கடி காரணமாக அங்கே பரிசோதனைக் கூடம் கூட கிடையாது. அங்கே கிட்டத்தட்ட 800-லிருந்து 900 மாணவிகள் படிக்கிறார்கள். 40 ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள். கடந்த ஆட்சியாளர்கள் இதன் மீது அக்கறையே காட்டவில்லை. எனவே, கல்விக்கு முதலிடம் கொடுக்கும் நம்முடைய இதயதெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நல்லாட்சியில் இந்த